ஊடக வெளியீடு

## காணாமற்போனோருக்கான அலுவலகத்தை (OMP) ஸ்தாபிப்பதில் மற்றும் செயல்முறைப்படுத்துவதில் அரசியலமைப்பு மற்றும் சட்டக் கட்டமைப்பினை பின்பற்றுவதன் முக்கியத்துவம்

24 ஜீலை 2017, அமைச்சர்களுக்கான விடயப்பரப்புக்கள் மற்றும் பணிகளை ஒதுக்கீடு செய்கின்ற போது, குறிப்பாக காணாமற்போனோருக்கான அலுவலகம் தொடர்பான விடயங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பின் ஏற்பாடுகளை பின்பற்றத் தவறியுள்ளமையினால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) வருத்தமைடைகின்றது. 2017 ஜுலை மாதம் 19 ஆம் திகதி அன்று ஜனாதிபதி சிறிசேன 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேறறுதலும் ) சட்டத்தினை (காணாமற்போனோருக்கான அலுவலகச் சட்டம்) தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சரிற்கு ஒதுக்கீடு செய்கின்ற வர்த்தமானி (விசேட) அறிக்கையினை 2028/ 45 வெளியிட்டார். இவ்வாறு செய்ததன் மூலமாக கடந்த இரண்டு வருட காலமாகவே தெளிவற்ற மற்றும் ஐயப்பாட்டிற்குரிய நிலையில் காணப்படுகின்ற அரசியலமைப்பின் தனி மதிப்புத் தொடர்பாக ஒரு முகாந்தரத்தினை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி ஆக்கப்பட்ட அரசியலமைப்பிற்கான 19 வது திருத்தத்தினால் வழங்கப்பட்ட அரசியலமைப்பு கட்டமைப்பு தொடர்பாக தனது அவதானத்தினைச் செலுத்துகின்றது. 19 ஆவது திருத்தத்திற்கு முன்னர் ஜனாதிபதி வேறு எந்த அமைச்சரவை அமைச்சரிற்கும் ஒதுக்கீடு செய்யப்படாத எவ் விடயப்பரப்பு அல்லது பணியினையும் தனக்கு ஒதுக்கீடு செய்து கொள்வதற்கு இயலும். இந்த ஏற்பாடானது 19 வது திருத்தத்தினால் நீக்கப்பட்டது. எவ்வாறெனினும் 19 வது திருத்தத்தின் தொடக்கத் திகதியன்று ஜனாதிபதியாக பதிவி வகிக்கும் நபருக்கான ஒரு விசேட விதிவிலக்கு உருவாக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கு பின்னர் ஜனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 43 (2) இற்கு ஏற்ப பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சுக்களுக்குப் பொறுப்பானவர்களாக நியமிப்பதற்கான இரண்டு வர்த்தமானிகளை வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் அரசியலமைப்பின் உறுப்புரை 43 (1) இற்கு ஏற்ப ஜனாதிபதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைச்சுக்களுக்கான விடயப்பரப்புக்கள் மற்றும் பணிகளினை ஒதுக்கீடு செய்வதற்கான 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 என திகதியிடப்பட்ட (விசேட) வர்த்தமானியினை வெளியிட்டார்.

மேலும் இவ்வர்த்தமானியானது (1933/13- 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 என திகதியிடப்பட்டது);

- எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படாத "தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சு" ஒன்றை ஸ்தாபித்தமை. மேலும் இந்த வர்த்தமானியானது இவ் அமைச்சினால் அமுல்படுத்தப்பட வேண்டிய எந்தவொரு சட்டம் தொடர்பிலும் குறிக்கவில்லை.

- எந்தவொரு அமைச்சருக்கும் ஒதுக்கீடு செய்யப்படாத அனைத்து விடயப்பரப்புக்கள் மற்றும் பணிகள் மற்றும் திணைக்களங்கள், பொதுக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டபூர்வமான நிறுவனங்கள் என்பனவற்றை ஜனாதிபதிக்கு ஒதுக்கீடு செய்தது.

எவ்வாறெனினும் 19 வது திருத்தத்தின் பிரிவு 51 இல் குறிப்பிடப்பட்டிருப்பவற்றிற்கு அப்பாலான விடயப்பரப்புக்கள் மற்றும் பணிகளை தமக்கு ஒதுக்கீடு செய்து கொள்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. அவ்வகையிலே தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சருக்குரிய அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குகின்ற 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 என திகதியிடப்பட்ட (விசேட) வர்த்தமானியின் பகுதிகள் அரசியலமைப்புக்கு முரணானவை.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சருக்கான எந்தவொரு அதிகாரத்தினையும் ஜனாதிபதி தமக்கென பெற்றுக் கொள்ளாத வரையில் இது கல்விசார் முக்கியத்துவமான விடயமொன்றாகவே அமையும். எவ்வாறெனினும் காணாமற்போனோருக்கான அலுவலகச் சட்டத்தினை தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சரிற்கு ஒதுக்கீடு செய்கின்ற 2028/ 45 வர்த்தமானி (விசேட) அறிக்கையினால் அத்தகைய நடவடிக்கைகளின் அரசியலமைப்பு இணங்கு தன்மை குறித்த ஆழமான விசரங்கள் எழுந்துள்ளன. காணாமற்போனோருக்கான அலுவலகத்தினை செயல்முறைப்படுத்துவதற்கு அமைச்சர் காணாமற்போனோருக்கான அலுவலகச் சட்டத்தின் பிரிவு 1 (2) இன் படி ஒரு வர்த்தமானியினை வெளியிட வேண்டும். இந்த வர்த்தமானியினை வெளியிடுகின்ற போது ஜனாதிபதி தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சர் என்ற ரீதியில் செயலாற்றுவார். ஜனாதிபதி தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சர் என்ற ரீதியில் அத்தகைய வர்த்தமானியினை வெளியிடுதலானது அரசியலமைப்பு முக்கியத்துவம் மற்றும் அவ்வாறு உருவாக்கப்படுகின்ற காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் வலிதாந் தன்மை தொடர்பான நிச்சயமற்ற தன்மை என்பன தொடர்பான வினாக்களை எழுப்பும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நம்புகின்றது.

முகத்தோற்ற அளவில் இவ்விடயம் கருதாப்பிழையாக கருதப்படக்கூடியதொன்று என்ற போதிலும் இவ்விடயம் திருத்தப்படாதவிடத்து இலங்கையின் அரசியலமைப்பு தொடர்பான குறைவான அக்கறையினை வெளிப்படுத்திக் காட்டுவதாக இது அமையும் என்பதனால் இது தொடர்பில் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கான, ஜனாதிபதி தவிர்ந்த வேறு ஒரு அமைச்சருக்கு தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சினை ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கான அல்லது காணாமற்போனோருக்கான அலுவலகச் சட்டத்தினை வேறொரு அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றது. இவ்வாறு செய்யத் தவறுகின்றமையானது அரசியலமைப்பின் மீறலாகவும் மற்றும் காணாமற்போனோருக்கான அலுவலகச் சட்டத்தினை உருவாக்குவதற்கு அரசாங்கம் எடுத்த நேர்மறையான நடவடிக்கைகளை இல்லாதாக்குவதாயும் அமையும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது நம்புகின்றது. இதற்கு உடனடி பின்பதாக வினாப்பொருளாக உள்ள குறிப்பிட்ட அமைச்சர் காணாமற்போனோருக்கான அலுவலகச் சட்டத்தின் படி ஒரு வர்த்தமானியினை வெளியிட்டு குறிப்பிட்ட சட்டத்தினை செயல்முறைப்படுத்த வேண்டும். இதன் பின்னர் காணாமற்போனோருக்கான அலுவலகத்திற்கான நியமனங்களுக்காக பகிரங்கமாக அழைப்பு விடுக்க வேண்டுமெனவும் மற்றும் ஜனாதிபதிக்கு விதந்துரைக்கப்படுகின்ற

நபர்கள் காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு அவசியமான நிபுணத்துவம், திறன் மற்றும் பல்வகைமை கொண்டவர்களாயும் அதேபோல மிக முக்கியமாக பாதிக்கப்பட்டவர்களின், பாதிக்கப்பட்ட சமுதாயங்களின் மற்றும் சிவில் சமூகங்களின் நம்பிக்கையினை பெற்றவர்களாகவும் இருப்பதனை உறுதி செய்ய வேண்டும் எனவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அரசியலமைப்பு பேரவையினை வலியுறுத்துகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது சமயத்திற்கேற்ற செயல்களுக்கான தன்னுடைய முன்னைய அழைப்புக்களையும் மற்றும் ஆயிரக்கணக்கான இலங்கைப் பிரஜைகளின் குறைகளைத் தீர்க்கின்ற முதலாவது சுயாதீனமான பொறிமுறையினை ஸ்தாபிப்பதற்கான தேவையினையும் மீண்டும் வெளிப்படுத்துகின்றது.